**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 09.07.2026**
**OS. No. 34/2025**
**வழக்கு சாட்சி PW.1– கிருபாவதி, க/பெ. ராஜசேகர்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி )

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

6. ரூ.4 லட்சம் கிரயத்தொகை கொடுத்ததற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ரூ.28 லட்சம் கிரயத்தொகையானது கிரயதேதியன்று HDFC காசோலையாக பிரதிவாதிகளுக்கு கொடுத்தேன். நான் தாவா சொத்தை கிரயம் வாங்கியதாக சொல்லும் ஆவண எண்.2377/2017 என்றால் சரிதான். HDFC யில் கடனானது என் கணவரின் Payசிலிப் மூலம் பெற்றதாகும். நான் சொத்துக்களை அடமானம் வைத்து மேற்படி சொத்துக்களை பெறவில்லை என்றால் சரிதான்.

7. நான் தாவா சொத்தை கிரயம் வாங்கிய தேதியான 09.10.2017ம் தேதியில் ஆவண எண்.2379/2017 ன் வாயிலாக HDFC வங்கியில் தாவா சொத்தினை அடமானம் வைத்து ரூ.28 லட்சம் கடன் வாங்கியதாக வில்லங்க சான்றிதழில் பதிவு உள்ளது என்றால் HDFC வங்கியில் கடன் பெற்றதால் அதற்கு பதிலாக அவர்கள் பெயரில் அடமானம் வைத்தேன்.

8. நான் தாவா சொத்தின் கிரய ஆவணம் பதிவு செய்த சமயத்தில் என்னிடம் மொத்தமாக கிரய தொகையாக ரூ.32 லட்சம் இல்லை என்றால் சரிதான், ரூ.4 லட்சம் மட்டும்தான் கையில் வைத்திருந்தேன், மீதி தொகையான ரூ.28 லட்சத்திதற்காக அதன் பின்பு உடனே தாவா சொத்தை HDFC வங்கியில் அடமானம் வைத்தேன். எந்த தேதியில் அடமானம் வைத்தது தொடர்பாக HDFC வங்கியில் விண்ணப்பித்திருந்தேன் என்றால் எனக்கு தெரியவில்லை, என் கணவருக்குதான் தெரியும்.

9. எத்தனை சர்வே எண்களிலுள்ள சொத்தை நான் கிரயம் பெற்றேன் என்றால் எனக்கு நினைவில்லை, எத்தனை சதுரடி நிலம் கிரயம் பெற்றேன் என்றால் எனக்கு நினைவில்லை. எத்தனை சதுரடி நிலத்தில் வீடு உள்ளது, எவ்வளவு காலி நிலம் உள்ளது என்றால் எனக்கு நினைவில்லை, ஆவணத்தை பார்த்தால்தான் சொல்லமுடியும்.

10. பிரதிவாதிகள் எந்த தேதியில் வங்கி காசோலையிலிருந்து பணம் எடுத்துக்கொண்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்கண்ட கிரய ஆவணம் பதிவு செய்வதற்கு எவ்வளவு பதிவு கட்டணம் செலுத்தினேன் என்றால் எனக்கு தெரியாது, என் கணவருக்குதான் தெரியும். யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் நாகராஜ் மற்றும் செந்தில்குமார் என்பவர்கள் கையொப்பம் செய்தார்கள்.

11. HDFC வங்கிக்கு பதிவு செய்து கொடுத்த ஆவணத்தின் பதிவு கட்டணம் தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. மேற்கண்ட பதிவு கட்டணம் நேரடியாக செலுத்தப்பட்டதா அல்லது வங்கி மூலம் செலுத்தப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது, என் கணவருக்குதான் தெரியும். மேற்கண்ட கிரய ஆவணத்தின் பதிவு கட்டணமும், என்னுடைய அடமான ஆவணத்தின் பதிவு கட்டணமும் 1ம் பிரதிவாதியின் மகனான நாகராஜ் என்பவர்தான் வங்கியில் செலுத்தினார் என்றால் அதுகுறித்த விவரம் எனக்கு தெரியாது.

12. கிரயம் பெற்ற தேதியன்றே தாவா சொத்தின் சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்ட்டது, 1 மாதம் கழித்து நாங்கள் அதில் குடிபெயர்ந்தோம். தாவா சொத்தில் நான் குடிபெயர்ந்த பிறகு யார் பெயரில் யார் குடிநீர் மற்றும் சொத்துவரி ஆகியவை செலுத்தி வருகிறார் என்றால், என் பெயரில் நான்தான் செலுத்தி வருகிறேன். கிரயம் பெற்ற பிறகு எந்த தேதியில் பட்டா மாறுதலுக்கு விண்ணப்பித்தேன் என்றேன் என்றால் கொரோனா காலம் என்பதால் 2019, 2020 ல் விண்ணப்பித்தேன், அதற்கான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை.

13. என் பெயரில் பட்டா வாங்கிய பிறகு அதன் அடிப்படையில் வரிகளும் 2019ல் என் பெயரில் மாற்றப்பட்டது. 2017ல் நான் கிரயம் பெற்ற பிறகு 2019 வரை பட்டா மாறுதல்

பெறுவதற்கு நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் 04.11.2018ல் என் கணவர் இறந்துவிட்டதால் என் பிள்ளைகளை நான் மட்டும் பார்த்து வந்தேன், அதனால் உடனே நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

14. தாவா சொத்தில் நாங்கள் 4 மாதம் இருந்துவிட்டு அதன் பின்பு என் கணவருக்கு கல்லீரல் சிகிச்சை சம்மந்தமாக கோயம்புத்தூருக்கு சென்றுவிட்டோம். என் நிரூபண வாக்குமூலத்தில் 2 வருடங்கள் நான் தாவா சொத்தில் இருந்ததாகவும், அதன் பின்னிட்டு என் கணவர் இறந்ததாலும் என் பிள்ளைகள் படிப்பு காரணமாகவும், சேலத்திற்கு குடிபெயர்ந்தாக சொல்லியிருந்தால் சரியல்ல, நாங்கள் அவ்வப்போது சென்று வந்துகொண்டிருந்தோம். 2017ல் நாங்கள் தாவா சொத்தில் குடிபெயர்ந்தபோது எந்த பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார்கள் என்றால், சேலத்தில் தான் படித்து வந்தார்கள், என் உறவினர் சாந்தா வீட்டில் தங்க வைத்திருந்தேன். அவரது முகவரி என்ன என்றால் வசந்தா நகர், திருவாக்கவுண்டனூர் ஆகும், கதவு எண் எனக்கு தெரியவில்லை. அதன் அருகிலும் எனது மற்ற சொந்தக்காரர்கள் உள்ளார்கள், அவர்கள் வீட்டிலும் மாறி மாறி தங்கியுள்ளார்கள்.

15. நான் 2024ம் வருடம் கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். ஒரு வீட்டை காலி செய்து கொடுப்பதற்கு காவல்துறையினருக்கு அதிகாரம் இல்லை என்றால் காவல்நிலையம் சென்றுதான் தெரிந்துகொண்டேன். காவல்நிலையத்தில் விசாரணையில் பிரதிவாதிகள் 2 மாதம் கால அவகாசம் கேட்டு எழுதிக்கொடுத்தார்கள். தாவா சொத்திலுள்ள வீட்டை அபகரிக்க வேண்டி பெயரளவில் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரய ஆவணத்தின் அடிப்படையில் பிரதிவாதிகளை காவல் நிலையத்தில் வைத்து மிரட்டி மேற்கண்டவாறு எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 29.07.2026ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது ).

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.